ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/68 - 2021 අගෝස්තු මස 07 වැනි සෙනසුරාදා - 2021.08.07

*2239/68 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *(175 ஆம் அதிகாரப்பத்திரம்) புண்ணிய ஸ்தல யாத்திரைகள் கட்டளைச் சட்டம்*

*ஊவா வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2021*

*ஊவா வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான எசல உற்சவம் 2021.08.08 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2021.08.23 ஆந் திகதி அதிகாலை நீர் வெட்டும் வைபவத்துடன் நிறைவுபெறும் என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*2. புண்ணிய ஸ்தல யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின்படி 1964, யூலை 24 ஆந் திகதிய 14117 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் இவ் உற்சவ காலங்களில் அமுலில் இருக்கும் என்பதை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

குணதாஸ சமரசிங்ஹ,
மொனராகலை மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
மற்றும் கொட்டபோவ குடா கதிர்காம தேவாலயத்தின்
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.

மொனராகலை மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
2021, ஓகத்து 02.


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஊவா வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2021**

*1964 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 14117 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புண்ணிய ஸ்தல யாத்திரை பற்றிய நிபந்தனைகளை மக்களின் கவனத்திற்கு இத்தால் கொண்டு வருகின்றேன். அந்த நிபந்தனைகளையும் அவைகள் தொடர்பான கீழ்க்காணும் அறிவித்தலையும் தருகிறேன்.*

*1.* ***முகாம் பிரதேசம்.****- கொட்டபோவ "தஹமல் ஒய" எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்குட்பட்ட பிரதேசம்.*

*2.* ***கட்டிடங்கள் அமைத்தல்.****- எனது அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற அதிகாரியின் கடித மூலமான அனுமதியின்றி எவரும் 2021.08.08 ஆந் திகதியிலிருந்து 2021.08.23 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் இம்முகாம் பகுதியில் எவ்வித நிரந்தர அல்லது தற்காலிகக் கட்டிடங்களை அல்லது கடைகளை அமைக்கக் கூடாது.*

*3.* ***யாசகர்கள்.****- புனித பிரதேசத்திலோ அல்லது முகாம் பகுதியிலோ மற்ற எந்த இடத்திலோ யாசகம் கேட்பது, வாங்குவது, அதே போல் யாசகம் கொடுப்பது, பகிர்வது தடை செய்யப்பட்டுள்ளது.*

*4.* ***குளித்தல், கழுவுதல்.****- கொட்டபோவ "தஹமல் ஒய" எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்கு உட்பட்ட பிரதேசத்தில் எவரும் குளிப்பதும், துணிகள் கழுவுவதும், மிருகங்களைக் குளிப்பாட்டுவதும் அல்லது வாகனங்களைக் கழுவுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.*

5. **வாகனங்கள் :**

*5.01 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் அனுமதி பெறாத பைசிக்களோ, மாட்டு வண்டியோ அல்லது எவ்வகையிலான வாகனமோ புனிதப் பிரதேசத்துக்குள் செலுத்துவதோ, உட்பிரவேசிப்பதோ கூடாது.*

*5.02 முகாமுக்குச் சொந்தமான கடைப்பகுதியில் வாகனத்தை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களைத் தவிர வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தக் கூடாது.*

*6.* ***காவடிக்கடைகள்.****- என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் அனுமதிப்பத்திரத்தைப் பெறாது எவரும் காவடிக்கடை நிறுவக்கூடாது.*

7. **வியாபாரம் :**

*7.01 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற எழுத்துமூல அனுமதியின்றி முகாம் திடலின் கடைகளைக் குத்தகைக்குக் கொடுப்பதும், ஏலம் விடுவதும் கூடாது. என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற அதிகாரியிடம் இப்பிரதேசத்தில் குறிப்பிடாத இடத்திலும் அவ்வாறான செயலில் எவரும் ஈடுபடக் கூடாது.*

*7.02 புனித பிரதேசத்திலுள்ள பாதசாரிகளின் பாலங்களை அல்லது முகாம் பகுதியிலுள்ள ஆற்றங்கரைகளை முறைகேடான விதத்தில் ஆக்கிரமிப்பது போல் கூடாரங்கள் அல்லது கட்டிடங்கள் அமைப்பது அல்லது அவைகளை விஸ்தரிப்பது கூடாது.*

*7.03 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற அனுமதியின் கீழ் பெற்றுக்கொண்ட இடத்தை விட்டு வேறு இடத்தில் திருநீறு, ஐஸ் கிறீம், பூசைப் பொருட்கள், பூசைத் தட்டுகள், உணவு வகைகள் மற்றும் ஏனையவைகள் விற்கக் கூடாது.*

*7.04 ஏதேனும் ஒரு வியாபாரத்தை நடாத்தும் அனைத்துக் கட்டிடத்திலும் அல்லது கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் இடத்திலும் 4 1/2 இற்கும் குறையாத கன அடியைக் கொண்ட குப்பை வாளியை வைத்திருத்தல் வேண்டும். அதில் குப்பைகளை இடும்போது வெளியேற்றப்படும் நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களில் அதை மூடி வைத்தல் வேண்டும். அத்துடன் குப்பையை அகற்றுவதற்கான தொழிலாளர்கள் வரும் வேளையில் அவைகளை வெளியில் வைக்க வேண்டும்.*

*7.05 விற்பனை செய்வதற்காக அனைத்து உணவுகளையும் பானங்களையும் ஈக்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் மூடிகள் கொண்ட பெட்டிகளில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*8. **ஆரோக்கிய சூழ்நிலையும் மக்கள் சுகாதாரமும்.**–* இவைகளைக் கருத்திற்கொண்டு ஒதுக்கப்பட்ட இடத்தைத் தவிர முகாமைச் சூழவுள்ள பிரதேசத்தில் எவரும் சிறுநீர், மலம் கழிப்பது கூடாது. அத்துடன் குறிப்பிட்ட இடத்தில் அல்லது தொட்டிகளைத் தவிர முகாமை அண்டிய பிரதேசத்தில் திண்மமான அல்லது திரவமான குப்பைகளை இடக்கூடாது.

என்னால் வழங்கப்படும் இக்கட்டளையை எவராலும் மீறப்படக் கூடாது.

குணதாஸ சமரசிங்ஹ,
மொனராகலை மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
மற்றும் கொட்டபோவ குடா கதிர்காம தேவாலயத்தின்
ஆடி மகோற்சவ பாசறைப் பொறுப்பதிகாரி.

மொனராகலை மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
*2021, ஓகத்து 02.*

*08-319*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.